10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | புதன்கிழமை மே 10 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

## மின் கட்டணம் அதிகரிக்காது



எந்தக் காரணத்திற்காகவும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படாது என மின்வலு எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாட்களில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக பிரசாரம் செய்யப்படுகின்றது. எனினும் இந்த விடயம் குறித்து மக்கள் தேவையற்ற பீதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. எமது அரசாங்கம் எந்தவொரு காரணத்திற்காகவும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## இன்று 50ஆவது இந்திரவிழா



வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் இந்திரவிழா இன்று கோலாகலமாக நடைபெறுகின்றது. இந்திரவிழா ஆரம்பிக்கப்பட்டு 50 ஆவது வருட நிறைவினை முன்னிட்டு இன்று காலை 50 அடி உயரமான இராட்சத புகைக்கூண்டு வானில் பறக்கவிடப்பட்டது.

3 கிலோமீற்றர் நீளமான வீதிச்சோடனைகளுடன் இரவு விழாவுக்கு வல்வெட்டித்துறை தயாராகியுள்ளது. 10 மேடைகளில் இரவிரவாக கலைநிகழ்வுகள் நடைபெறவுள் என. இம்முறை இந்திரவிழாவுக்கு 2 லட்சத்துக்கும் அதிக மானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-07)

## அமைச்சரின் பதவி பறிப்பு

வட மத்திய மாகாண சபையின் சுகாதாரம், சுதேச மருத்துவத்துறை, சமூகநலம் மற்றும் மாகாண அலுவல்கள் அமைச்சர் கே.எச். நந்தசேன அவரது அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் பதவிக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.ஹேரத் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்று இன்று பகல் 01 மணிக்கு இடம்பெறுகிறது.

## ௬0 வருடங்களின் பின் வேள்வி



திருகோணமலையில் குளக்கோட்ட மன்னன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட குளக்கட்டு மடை எனப்படும் திருக்குளத்து வேள்வி, 60 வருடங்களின் பின்னர் இந்த வருடம் நடைபெறவுள்ளது. வேள்வியின் ஆரம்ப நிகழ்வாக, கந்தளாய் குளக்கட்டில் இன்று காலூன்றும் நடவடிக்கை நடைபெற்றது.

இன்று முதல் 45 நாட்களுக்கு வேள்வி நடைபெறவுள்ளது. மழை வேண்டி நடத்தப்படும் இந்த வேள்விச்சடங்கு, தம்பலகாமம் ஆதிகோணநாதர் கோவில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைமைத் துவத்துடனும் விவசாய சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் தம்பலகாமம் பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் பங்களிப்புடனும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மோடியை சந்திக்கிறது கூட்டமைப்பு



### அரசியல் தீர்வை வலியுறுத்தும்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடவுள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

"இந்தியப் பிரதமருடன் நடக்கவுள்ள சந்திப்புத் தொடர்பாக இந்தியத் தூதரகம் என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியது, இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் போது, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, காணாமலாக்கப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்களின் நிலைமை, காணி விடுப்பு, அது தொடர்பாக இடம்பெறும் போராட்டங்கள், வாழ்வாதாரத் தேவைப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் எடுத்துரைக்கவுள்ளோம் என்றார் அவர். (உ)



## அம்பாந்தோட்டை சீனா வசம்

### அமைச்சரவை அங்கீகாரம்

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. ஸ்ரீலங்கை சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலரின் கடும் எதிர்ப்பையும் மீறி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நாட்டின் கடன்தொகை நெருக்கடியை சமாளிப்பதற்கு வேறு வழியில்லை என பிரதமர் ரணில் சுட்டிக்காட்டினார். சீனாவிற்கு இலங்கை செலுத்த வேண்டிய கடன்தொகையும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவதன் மூலம் குறைவடையும் எனவும் வலியுறுத்திய நிலையில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-9)

## விடுவியுங்கள்

தனது சிறைத் தண்டனையைக் குறைத்து சாதாரண பிரஜையாக வாழ வழிசெய்யுமாறு அரசியல் கைதி ஒருவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். ஆயுள் தண்டனைக் கைதியாக கடந்த 24 வருடங்களாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மகேந்திரன் என்பவரே தன்னை விடுதலை செய்யுமாறு கோரி மனு சமர்ப்பித்துள்ளார்.

## விபத்தில் காயம்



வவுனியாவில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் மீது அதே பாதையில் பயணித்த சொகுசு வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளின் சாரதியே காயமடைந்துள்ளார்.

## மயங்கி வீழ்ந்த மாணவி சாவு



மாணவி ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் க.பொ.த சாதாரண தரத்தில் (தரம் 11) கல்வி பயிலும் புவனேந்திரன் கீர்த்தனா (16 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலையில் நடைபெற்ற மேலதிக வகுப்பு முடிவடைந்த போது இந்த மாணவி மயங்கி விழுந்திருந்தார்.

எதிரொலி
Ethiroli
விரைவில் அதிக பக்கங்களுடன் உங்கள் கைகளில்..

## தென்கொரிய ஜனாதிபதியாகிறார்

# மூன் ஜயே இன்



தென்கொரிய ஜனாதிபதித் தேர்தலில் மூன் ஜயே-இன் தலைமையிலான லிபரல் கட்சி 41.1 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியாக இருந்த பார்க் ஜியூன் - ஹை ஊழல் காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.


ஜனநாயக கட்சி சார்பில் மூன் ஜயே-இன்னும், கன்சர் வேடிவ் கட்சி வேட்பாளராக ஹாங் ஜோன்-பையோவும், மிதவாதியான அகின் சியோல்- சூ ஆகியோரும் போட்டியிட்டனர்.

தொடக்கத்தில் இருந்தே ஜனநாயக கட்சி வேட்பாளர் மூன் ஜயே-இன் முன்னணியில் இருந்தார். முடிவில் அவர் அபார வெற்றி பெற்றார். அவர் 41.1 சதவீத வாக்குகள் பெற்றார்.

தேர்தலில் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பு ஏற்கவிருக்கும் மூன் ஜயே-இன்னுக்கு 64 வயது ஆகிறது.

மூன் ஜயே- இன்னுக்கு தென் கொரியாவின் நட்பு நாடான அமெரிக்கா வாழ்த்துத் தெரிவித்துள்ளது. அத்துடன் அண்டை நாடான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேதயும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். (ஓ)

## வைகையாற்றில் கள்ளழகர்



கடந்த திங்கட்கிழமை மதுரை அழகர் கோயிலிருந்து கிளம்பிய கள்ளழகரான சுந்தரராஜப்பெருமாள், இன்று காலை 7 மணிக்கு வீரராகவப்பெருமாளின் வரவேற்புடன் வைகை ஆற்றில் இறங்கினார். இந்த அற்புதக் காட்சியைக் காண லட்சக்கணக்கான மக்கள் நேற்று இரவு முழுவதும் வைகைக் கரையோரம் காத்துக்கிடந்தனர்.

## போர்ப்பதற்ற எல்லையில்

# சீனாவின் மிரட்டல்



கொரிய எல்லையில் போர்ப்பதற்றம் நிலவும் சூழலில், சீனாவும் தனது பங்குக்கு பரபரப்பை ஏற்படுத்தும் விதமாக ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

இரண்டு கொரிய நாடுகளும் சீனாவும் பகிர்ந்துகொள்ளும் பாகாய் குடா கடல் பகுதியிலேயே இந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. சீன அரசு செயற்கைக்கோள் வழிகாட்டலில் இயங்கும் இந்த ஏவுகணை வெற்றியடைந்ததாகத் தெரிவித்துள்ளது. (ஓ)

## மருத்துவமனையில் சோனியா



உணவு ஒவ்வாமை காரணமாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, டில்லி கங்காராம் மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்போது அவரது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இன்று வீடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ)

## ஆச்சரியத் திருமணம்

சவுதியில் வேலை செய்யும் மணமகனுக்கும், இந்தியாவின் உத்திரப்பிரதேசத்தில் வசிக்கும் இளம் பெண்ணுக்கும் "வீடியோ கொன்பிரன்ஸ்" மூலம் திருமணம் நடைபெற்றமை பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

விசா உள்ளிட்ட காரணங்களால் மணமகனால் திருமணத்தன்று இந்தியா வரமுடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் திருமணத்தைத் தள்ளிப்போட விரும்பாத இரு வீட்டாரும் ஆலோசித்து வீடியோ கொன்பிரன்ஸ் மூலம் திருமணத்தை நடத்தி முடித்துள்ளனர். (ஓ)

## கருணாநிதியுடன் அழகிரி



"கருணாநிதியின் 94ஆவது பிறந்த நாளான எதிர்வரும் 3ஆம் திகதியன்று சென்னையில் நடக்கவுள்ள கருணாநிதியின் சட்டப்பேரவை வைர விழாவில் நிச்சயம் பங்கேற்பேன்" என மு.க. அழகிரி கூறியுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி தனது தாயார் தயாளு அம்மாள் மற்றும் குடும்பத்தினரைச் சந்திக்கச் சென்றபோது செய்தியாளர்களிடம் பேசியபோது,

"எப்போதும் வீட்டுக்கு வந்து செல்வது போல் தாய் - தந்தையை பார்க்க வந்தேன். கருணாநிதி தூங்கிக் கொண்டிருந்ததால் நேரில் சந்திக்க முடியவில்லை. தாயார் தயாளு அம்மாளை மட்டும் சந்தித்து உடல் நலம் விசாரித்தேன்.

சென்னையில் 3ஆம் திகதி நடக்கவுள்ள கருணாநிதியின் சட்டப்பேரவை வைர விழாவில் நிச்சயம் பங்கேற்பேன்" என்றார்.

தி.மு.க.விலிருந்து அழகிரி 2014ஆம் ஆண்டு நீக்கப்பட்டார். அதன் பிறகு அவர் அரசியலில் இருந்து ஒதுங்கியே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பிரபு தேவாவை இயக்கும் சுப்புராஜ்



தனுஷ் நடிக்கும் படத்தை இயக்கவிருந்த கார்த்திக் சுப்புராஜ், அந்தப் படத்தின் படப்பிடிப்பு தள்ளிப்போனதால் கிடைத்த இடைவெளியில் பிரபுதேவா நடிக்கும் ஒரு படத்தை இயக்கவுள்ளாராம். தனுஷ் படம் ஒக்டோபர் மாதம் தொடங்கும் எனத் தெரியவருகிறது. (ஐ)

## மூவருக்கு தூக்கு



பெண் என்ஜினியர் ஒருவரை பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்குட்படுத்தி கொலை செய்த வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதித்து புனே நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்துக்கே தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### ஐ.பி.எல். அணிகளின் நிலை (இன்று வரை)

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| மும்பை | 12 | 9 | 3 | 0 | 0 | 18 |
| கொல்கத்தா | 13 | 8 | 5 | 0 | 0 | 16 |
| புனே | 12 | 8 | 4 | 0 | 0 | 16 |
| ஹைதராபாத் | 13 | 7 | 5 | 0 | 1 | 15 |
| பஞ்சாப் | 12 | 6 | 6 | 0 | 0 | 12 |
| குஜராத் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 |
| டில்லி | 11 | 4 | 7 | 0 | 0 | 8 |
| பெங்களூர் | 13 | 2 | 10 | 0 | 1 | 5 |

குறிப்பு: போ : போட்டி வெ : வெற்றி தோ : தோல்வி ச : சமன் மு.அ. : முடிவற்றது பு : புள்ளி

### ஐ.பி.எல். நேற்றைய ஆட்ட முடிவு

பஞ்சாப் 14 ஓட்டங்களால் வெற்றி

பஞ்சாப் 167/6 (20) - கொல்கத்தா: 153/6 (20)

# இராணுவ பலமிக்க 10 நாடுகள்

இராணுவ பலத்தில் உலகின் மிக வலிமையான 10 நாடுகள் குறித்த தகவலை "குளோபல் பயர்பவர்" அமைப்பும் "கிரெடிட் சூசே"வும் இணைந்து வெளியிட்டுள்ளன.

இதில், அணு ஆயுத வல்லமை குறித்த தகவல்களில் முரண்பாடுகள் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாததால் அதுகுறித்து இந்த ஆய்வில் தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

இதன் படி உலக வல்லரசான அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்காவிடம்



1,40,000 இராணுவ வீரர்களும், 8,848 பீரங்கிகளும், 13,892 போர் விமானங்களும், 72 நீர் மூழ்கிக் கப்பல்களும் உள்ளன. பல நாடுகள் ஒரு விமானம் தாங்கிப் போர்க்கப்பலைப் பெறுவதே கடினமாக உள்ள நிலையில், அமெரிக்காவிடம் 20 விமானம் தாங்கிப் போர்க்கப்பல்கள் உள்ளன.

ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் முறையே 2,3ஆவது இடங்களைப் பிடித்துள்ளன. அடுத்தடுத்த இடங்களில் முறையே இந்தியா, பிரித்தானியா, பிரான்ஸ், தென்கொரியா, ஜேர்மன், ஜப்பான், துருக்கி ஆகிய நாடுகள் உள்ளன. (ஓ)

## வீடுகள் நிர்மாணம்

வலிகாமம் மேற்கில் சுமார் 65 வீடுகளை நிர்மாணிப் பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவ டிக்கை எடுத்துள்ளன. மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூளாய் கிராம அலுவலர் பிரிவில் இந்த வீடுகள் நிர்மானிக் கப்படவுள்ளது. ஏற்கனவே தேசிய வீட மைப்பு அதிகார சபையி னரால் பொன்னாலைச் சந்தியில் அமைக்கப்பட்டி ருந்த 65 வீடுகள் கடந்த யுத்தகாலத்தில் முழுமை யாக அழிவடைந்து விட் டன. இந்த இடத்திலேயே இப்போது புதிதாக 65 வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளன. (உ-06)

## சமநிலை

உரும்பிராய் சரஸ்வதி யாழின் நட்சத்திரம் உதைபந்தாட்ட தொட ரின் சுப்பர் 8 ஆட்டத்தின் நேற்றைய போட்டியில் குருநகர் பாடும்மீன் எதிர் குப்பிளான் குறிஞ்சி குமரன் அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் 2-2என்ற கோல் கணக்கில் சமனிலையில் போட்டி முடிவு பெற்றது. (ஆ-23)

## போராட்டம் வெடிக்கும்

### சிவமோகன் எச்சரிக்கை




அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட் டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை செயற்படுத்த முயன்றால் மக் கள் போராட்டம் வெடிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் எச்சரித்துள் ளார். "தற்போது உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டமே கடந்த காலங்களில் அரசை, போர்க்குற்றம், இனப்படு கொலை போன்றவற்றுக்குள் தள்ளிவிடக்காரணமாக அமைந்தது. அப்படியிருக்க புதிய பயங்கரவாத எதிர்ப் புச் சட்டம் சர்வதேச விழுமியங்களை ஒழுகியதாக அமைய வேண்டுமென, அனைவரும் வலியுறுத்துகின்ற னர் என அவர் குறிப்பிட்டார். (ஊ)

## அம்பாறையில் சிறுவன் மரணம்

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறையில் ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட் டுள்ளான். அப்துஸ் ஸலாம் தாலிக் அஹமட் எனும் நான்காம் வகுப்பில் கல்வி பயில்கின்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் வேளையில் சிறுவனின் தாய், பூட்டிய நிலையில் இருந்த படுக்கையறையை திறந்த போது மகன் உயிரிழந்தது போன்ற நிலையில் கிடைப்ப தைக் கண்டு, வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். வைத்திய பரிசோதனையின்போது சிறுவன் உயிரிழந்திருப்பதை வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ஊ)

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிக்கல

## மந்தமான பொருளாதார வளர்ச்சி

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மிகச் சிறிய வளர்ச்சியையே எட்டும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத் துக்கான ஐ.நா பொருளாதார சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆசிய பசுபிக்கிற்கான ஐநா பொருளாதார சமூக ஆணைக்குழுவின் அறிக்கை 2017 கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 2016ஆம் ஆண்டு 4.4 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டில் 4.8 வீதமாக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. 2018ஆம் ஆண்டில், இது 4.9 வீதமாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (உ)

## வெசாக் மறைத்த தூபி



வெசாக் அலங்கார விளக்குகளின் பின்னால் மறைந்துபோயிருக்கிறது. தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்தோர் நினைவுத் தூபி. இதுவே இராணுவ நினைவுச் சின்னங்கள் என்றால் வெசாக் அலங்காரங்களால் மறைப்பார்களா? புத்தரின் கருணை இறந்தவர்களின் நினைவுத் தூபி மீதும் இல்லையா?

(படம் - சாளின் - முகப்புத்தகத்திலிருந்து)

## கீரை ஒரு பிடி 40/=

சித்திரைப் பௌர்ணமி விரதத்தால் யாழ். குடாநாட்டு சந்தைகளில் வழமையைவிட கீரையின் விலை ஏறியது. ஒரு பிடி கீரையின் விலை 40 ரூபா வாக விற்பனை செய்யப் பட்டது. சில சந்தைகளில் கீரைக்கு தட்டுப்பாடும் நிலவியது. (அ-03)



### வலி.மேற்கில்

## நீர்த்தொட்டிகள்

நீர் வழங்கல் திணைக்களத் தினால் மூளாய் மற்றும் வட்டுக்கோட்டையில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்கவுள் ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. நீர் தட்டுப் பாடுள்ள மக்கள் பயனடை யும் வகையில் ஒவ்வொன் றும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நீர்த்தொட் டிகள் அமைக்கப்பட வுள்ளன. மூளாயில் 10 தொட்டிகளும் வட்டு மேற்கில் 05 தொட்டிகளும் அமைக்கப்படவுள்ளன. இதேவேளை வட்டு. மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள திருநாவுக் கரசு வித்தியாலயத்தில் 'வேள்ட் விசன்' நிறுவனத் தின் உதவியுடன் மழைநீர்சேகரிப்புத் தொட்டியொன்று அமைக் கப்பட்டுள்ளது. (உ-06)



## ஏமாற்றம்

முள்ளிக்குளம் மக்களின் சொந்த நிலங்கள் விடுவிக்கப்பட்டு 10 தினங்களை கடக்கின்ற போதும், அந்த மக்கள் தமது சொந்தக் காணிகளில் சுயமாக குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட் தந்தை அன்ரன் தவராசா தெரிவித்தார். "தற்போது அந்த மக்கள் முள்ளிக்குளம் ஆலயத்தில் இருக்கின்றார்கள். இரண்டு நாட்களில் அவர்களது காணிகளில் குடியேற முடியும் எனக் கூறப்பட்டது. 10 நாட்களாகியும் எந்தப் பயனு மில்லை" என்றார்.



### கூரையைப் பிடுங்கிய

## மோடியின் ஹெலி

இந்திய பிரதமர் வெள்ளிக்கிழமை ஹட்டன் வருகிறார். அதற்கான ஒத்திகை டன்பார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பரீட்சார்த்த தரையிறக்க நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய உலங்கு வானூர்தியினால் ஐந்து வீடுகள் சேதமா கின. இது தொடர்பில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதிக வலுவுடைய உலங்கு வானூர்தியின் விசிறிகளினால் அதிக காற்று வீசியதாலேயே குடியிருப்பின் கூரைப் பகுதிகள் காற்றில் தூக்கி வீசப்பட்டன. இதனையடுத்து மைதானத்தை சூழவுள்ள குடியிருப்புகளின் கூரைகளில் மணல் மூடைகளை வைக்குமாறு அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஊ)

## சீருடைகள் அன்பளிப்பு



கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பூநகரி முக்கொம்பன் வித்தியாலயத்திற்கு சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலா யுதம் கணேஸ்வரனால் சுமார் 49 ஆயிரம் ரூபா பெறு மதியான விளையாட்டு சீருடைகள் வழங்கப்பட்டுள் ளன. வலைப்பந்து, கால்பந்து, கிரிக்கெற் மற்றும் கரப்பந்து ஆகிய விளையாட்டுக் களுக்குரிய சீருடைகளே நேற்று வழங்கப் பட்டன. இதேவேளை கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக் கிடை யிலான கிரிக்கெற் போட்டியில் குறித்த பாட சாலை 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ-23)

2 மணி நேரத்தில்
500/=
சம்பாதிக்க வேண்டுமா?
தொடர்புக்கு
021 300 4848

## நாளை நாளும் கோளும்

11.05.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள்.

பிரதமை பி.இ. 05.08 வரை | விசாகம் பி.ப. 05.13வரை | சித்தம்
இராகுகாலம் 01.24-02.54 | சுபநேரம் 07.24-08.54 | எமகண்டம் 05.54-07.24

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தடங்கல் | வெற்றி | நஷ்டம் | ஆர்வம் | புகழ் | சுகம் | தோல்வி | பயம் | லாபம் | வீண்செலவு | வரவு | காரியசித்தி |

## மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு பின்னணியில் புலனாய்வுப் பிரிவு

“தனிப்பட்ட அரசியல் காரணிகளுக்காகவோ அல்லது மே தினக் கூட்டத்தை கண்டோ முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. புலனாய்வு பிரிவின் ஆலோசனைக்கு அமையவே மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது” என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பை விடவும் அதிகமான பாதுகாப்பு இப்போதும் அவருக்கு உள்ளது. அதையும் மீறிய அதி உச்ச பாதுகாப்பு அவருக்கு அவசியம் இல்லை என புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையிலேயே மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு பாராட்டு

சர்வதேச வெசாக் தினத்தில் இலங்கையின் பங்களிப்பு குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு பாராட்டை வெளியிட்டுள்ளது. வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பு மிக்கவை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார். மனித உரிமைகள், நல்லாட்சி, மரியாதை அளித்தல் போன்ற பல்வேறு நல்ல விடயங்களை பௌத்தம் போதிக்கின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## அந்த நாள் ஞாபகம்.....!



**1994.05.10**

கறுப்பினக் காந்தி என வர்ணிக்கப்படும் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் தேர்தலில் வென்று தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவான நாள் இன்று.

20 குப்பை மேடுகளால்

## ஆபத்து

நாடாளவிய ரீதியில் உள்ள 200குப்பை மேடுகளில் 20 குப்பை மேடுகளால் ஆபத்து ஏற்படக்கூடும் என அதிகாரிகள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளனர்.

கழிவு முகாமைத்துவத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சகல உள்ளூராட்சி ஆணையாளர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போதே இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. (எ-9)

## கைதிகள் விடுதலை

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 550 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். நாட்டின் பல் வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளிலிருந்தும் சிறு குற்றங்கள் புரிந்த கைதிகளே நன்னடத்தை காரணமாக இன்று விடுவிக்கப்பட்டனர்.

## கடனாளி

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதனிய, அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் கடனாளி என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, குறைந்த வாழ்வாதாரங்களை பெறும் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு உதவிகளை செய்து வருகின்றார். இந்நிலையிலேயே குழந்தையொன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக தனியார் வைத்தியசாலையில் முற்பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த சிகிச்சைக்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதனியவின் பெயர் இடப்பட்டிருந்ததுடன் முற்பதிவுக் கட்டணமும் பெறப்பட்டிருந்தது.

ஆனால் அவர் சைட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதால் அன்றையதினம் சிகிச்சை வழங்கவில்லை. அந்த பணத்தினை தற்போது வரை மீளச் செலுத்தவுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## காசு மோசடி

**பொலிஸில் முறைப்பாடு**



வெளிநாட்டு மோகத்தில் முகவர் ஒருவரிடம் பணத்தினைக் கொடுத்து ஏமாந்த நான்கு இளைஞர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். தொண்டைமானாறு கொற்றாவத்தையைச் சேர்ந்த இளைஞர்களே தலா ஒரு இலட்சம் ரூபா பணத்தினை கொடுத்து ஏமாற்றமடைந்ததாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-3)

## ஆளுநர் கொடுத்த கிழங்கு



வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் ஏற்பாட்டில் ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக மரவள்ளிக்கிழங்கு தானம் இன்று முற்பகல் 10 மணியளவில் தொடங்கியது. (இ)

## பௌர்ணமி விழாவில் கௌரவிப்பு



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும், வவுனியா ஆங்கிலச் சங்கமும் இணைந்து நடத்திய முழுநிலா கருத்தாடல் நிகழ்வு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இன்று நடைபெற்றது. இதன்போது சகல முதியோருக்கும் ஓய்வூதியம் வழங்கக்கோரி இலங்கையை முழுதும் சைக்கிளில் சுற்றிவந்த த.பிரதாபன் என்பவர் கௌரவிக்கப்பட்டார். (இ)

மீனவர் பிரச்சினை குறித்துப் பேசவேண்டும்


## மோடியிடம் வாசன் வலியுறுத்தல்

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர், தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து பேச வேண்டும் என்று முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர், இலங்கைப் பிரதமரை நேரில் சந்திக்கும்போது இந்திய மீனவர்கள் குறித்து குறிப்பாக தமிழக மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து முக்கியப் பேச்சு நடத்த வேண்டும். தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக கச்சத்தீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த உரிமை வழங்கப்பட வேண்டும். இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணிக்கும் பாதுகாப்புக்கும்

## சம்பந்தமேயில்லை



போரின் போது பாதுகாப்பு காரணங்களுக்கென கையகப்படுத்தப்பட்ட எமது மக்களின் காணிகளுக்கும், தேசிய பாதுகாப்புக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அறிக்கையில் ,

“தற்போது யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, பல வருடங்கள் கழிந்துள்ள நிலையில், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக நான் நம்பவில்லை.அதே நேரம், தேசிய பாதுகாப்பு கருதி படைகள் அங்கு நிலைகொள்ள வேண்டுமாயின், பொருளாதார வளங்கள் குன்றிய, அரசதரிசு நிலங்கள் பெருந்தொகையில் இருக்கின்றன. அவற்றைப் படையினர் பயன்படுத்தலாம் ”- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### வாசகர் கவனத்துக்கு...

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே “எதிரொலி”யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

### செய்தியாளர்கள் தேவை

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விவரங்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.